அனுப்புநர்:
திரு. ப.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை மாவட்டம்.

பெறுநர்:
முதன்மைச் செயலர்/
வருவாய் நிருவாக ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை - 600 005.

ந.க. NC1/ 21798 /2020 நாள்: 22 .02.2022

அய்யா,

பொருள்: பேரிடர் மேலாண்மை - ஆப்தமித்ரா திட்டம்- சிவகங்கை மாவட்டம் - ஆப்தமித்ரா திட்டத்தின்கீழ் தன்னார்வலர்களுக்கு பயிற்சியளிக்க பயிற்சி நிறுவனங்களைத் தேர்வு செய்து அறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை: முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக வாட்ஸ்அப் செய்தி நாள்: 22.02.2022

சிவகங்கை மாவட்டத்தில் ஆப்தமித்ரா திட்டத்தின் கீட் 300 தன்னார்வலர்களுக்கு 12 நாட்கள் உணவு மற்றும் தங்கும் வசதியுடன் கூடிய பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சி அளிக்க பயிற்சி நிறுவனங்களைத் தேர்வு செய்து அறிக்கை அனுப்பி வைக்கும்கும்படி கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான பயிற்சியளிக்க TNSMART வலைத்தளத்தில் "RAANVETTAI" என்ற பயிற்சி நிறுவனம் பதிவு செய்திருந்ததையடுத்து, அப்பயிற்சி நிறுவனத்தின் நிறுவனர் திரு.கென்னடி ஆறுமுகம் என்பவரைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டதில் அந்நிறுவனம் தற்பொழுது சிவகங்கை மாவட்டத்தில் செயல்படவில்லை என்ற விபரத்தைத் தெரிவித்தார். எனவே, இப்பயிற்சி நிறுவனத்தை களஆய்வு செய்து அறிக்கையை பதிவேற்றம் செய்ய இயலவில்லை என்ற விபரத்தைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் இயங்கிவரும் TRUPA என்ற பயிற்சி நிறுவனத்தை புலத்தணிக்கை செய்ததில் ஒரே நேரத்தில் 60 நபர்களுக்கு பயிற்சியளிக்கும் வகையில் உள்ளது என்பதையும் கள ஆய்வு செய்து அறிக்கையை இத்துடன் இணைத்தனுப்பியுள்ளேன் என்ற விபரத்தினை தெரிவிப்பதுடன் TRUPA பயிற்சி நிறுவனம் TNSMART வலைத்தளத்தில் பதிவு செய்யவில்லை என்ற விபரத்தையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு: பயிற்சி நிறுவனம் - களஆய்வு அறிக்கை

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட ஆட்சியருக்காக,
நேர்முக உதவியாளர் (பொது),
சிவகங்கை.

22-2-22

Scanned with CamScanner

அனுப்புநர்
திரு.த.வெங்கடேஷ், எம்.ஏ.,
வட்டாட்சியர்,
திருப்பத்தூர்.

பெறுநர்
மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை.

ந.க.எண்:அ2/3693/2021, நாள்: .02.2022
திருவள்ளுவராண்டு 2053, பிலவ - மாசி

ஐயா,

பொருள்: பேரிடர் மேலாண்மை - சிவகங்கை மாவட்டம் - திருப்பத்தூர் வட்டம் - பேரிடர் மேலாண்மை திட்டம் - **AAPTHAITHRA SCHEME**- கீழ் தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளித்தல் - பயிற்சி மையம் தேர்வு செய்தல் - அறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை: சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக புலனச் செய்தி, நாள்:17.02.2022.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் **AAPTHAITHRA SCHEME**- கீழ் பயிற்சி பெற தகுதியான 30 தன்னார்வலர்களின் விவரங்கள் பட்டியல் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் தகுந்த பயிற்சி மையத்தினை தேர்வு செய்து, அறிக்கை அனுப்ப பார்வையில் காணும் செய்தியில் கேட்கப்பட்டதன் பேரில் திருப்பத்தூரில் இயங்கிவரும் TRUPA தொண்டு நிறுவனத்தினை ஆய்வு செய்து, எனது ஆய்வு அறிக்கையினை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இணைப்பு : மேற்குறிப்பிட்டவாறு,

வட்டாட்சியர், 17.2.22
திருப்பத்தூர்.

## பயிற்சி மையத்தை பார்வையிடும் போது கவனிக்க வேண்டிய மற்றும் பயிற்சிக்கு தேவையான அளவுகோள்களின் பட்டியல்

| வ. எண் | பொருள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1. | குறைந்த பட்சம் 30 பேருக்கான இருக்கை வசதி இருக்கிறதா? | ஆம் | |
| 2. | செய்முறை மேற்கொள்வதற்கான பயிற்சி அறை | ஆம் | |
| 3. | செய்முறை மேற்கொள்வதற்கான நீச்சல் குளம் உள்ளதா? | | இல்லை |
| 4. | குறைந்தபட்சம் 8 பயிற்றுநர்கள் உள்ளனரா? | 2 பயிற்றுநர்கள் உள்ளனர் | |
| 5. | அனைத்து பயிற்றுநர்களும் முன் அனுபவம் பெற்றவர்களா? | | இல்லை |
| 6. | பேரிடர் காலங்களில் பயன்படுத்தப்படும் மீட்பு உபகரங்கள் உள்ளனவா? | | இல்லை |
| 7. | பயிற்சிக்கான உபகரணங்கள் மற்றும் உப பொருட்கள் உள்ளனவா? | | இல்லை |
| 8. | 30 பயிற்சியாளர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதி | ஆம் | |
| 9. | 10" X 15" அளவுள்ள குறைந்தபட்சம் 12 அறைகள் உள்ளனவா? | ஆம் | |
| 10. | நூலக வசதிகள் இருக்கின்றதா? | ஆம் | |
| 11. | ஒத்திகைப் பயிற்சி நடத்தும் வசதி உள்ள இடம் உள்ளதா? | ஆம் | |
| 12. | சிசிடிவி கேமரா மற்றும்<br>பயோ-மெட்ரிக் வசதிகள் உள்ளனவா? | இல்லை<br>பயோ-மெட்ரிக் வசதி உள்ளது. | |
| 13. | பயிற்சி நிறுவனம் சொந்த கட்டிடத்தில் அல்லது வாடகை கட்டிடத்தில் இயங்குகிறதா? | சொந்த கட்டிடம் | |
| 14. | வாடகை கட்டிடம் என்றால் வாடகை ஒப்பந்தத்தின் நகல் சமர்பிக்கப்பட்டதா? | | இல்லை |
| 15. | பயிற்சியாளர்களின் சுயவிவரம் கொண்ட தொகுப்பு சமர்ப்பிக்கபட்டதா? | | இல்லை |
| 16. | ஆண்/ பெண் கழிவறை வசதிகள் உள்ளனவா? | ஆம் | |
| 17. | போதிய வசதியுடன் கூடிய சமையலறை மற்றும் உணவு உண்ணும் அறை இருக்கின்றதா? | ஆம் | |
| 18. | தேவைப்படும் நேர்வுகளில் உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா? | ஆம் | |

மாவட்ட ஆட்சியர்
திருப்பத்தூர்

# பயிற்சி மையத்திற்கான சரிபார்ப்பு பட்டியல்

| வ. எண் | பொருள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1. | பயிற்சியில் கலந்து கொள்ள இருக்கை ஏற்பாடு மற்றும் வசதி எழுதுவதற்கும் குறிப்பு எடுப்பதற்கும் வசதியாக உள்ளதா? | — | இல்லை |
| 2. | பயிற்சி மையத்தின் அறைகள் மற்றும் பிற பகுதிகளில் போதுமான வெளிச்சம் உள்ளதா? | ஆம் | |
| 3. | பயிற்சி மேற்கொள்வும், தங்குவதற்கும் உகந்த சூழல் இருக்கின்றதா? | ஆம் | |
| 4. | வகுப்பு அறைகள் சத்தம், கவனச்சிதறல்கள் இல்லாத சூழ்நிலையை வழங்குகின்றதா? | ஆம் | |
| 5. | ஆண் மற்றும் பெண் தன்னார்வலர்களுக்கு தனித்தனி அறை வசதி உள்ளதா? | ஆம் | |
| 6. | பயிற்சி மற்றும் தங்கும் அறைகளில் போதுமான காற்றோட்டம் உள்ளதா? | ஆம் | |
| 7. | கரும்பலகை அல்லது பவர் பாயிண்ட் விளக்கக்காட்சி திரை வசதிகள் உள்ளனவா? | ஆம் | |
| 8. | பயிற்சியாளருக்கு கணினி வசதிகள் உள்ளனவா? | 3 கணினிகள் மட்டும் உள்ளது. | |
| 9. | அடிப்படை ஜிம் அல்லது உடல் பயிற்சி வசதி உள்ளனவா? | — | இல்லை |

19.2.22
வட்டாட்சியர்
திருப்பத்தூர்